VEMANA VENBA

A TRANSLATION

FROM THE

TELUGU LANGUAGE

BY

A. VENCATASUBBU PILLAI.

PUBLISHED BY

P. MANGAPUTHY NAIDU, B. A.,

Madras Christian College.

MADRAS:

PRINTED AT K. R. PRESS,

1 8 9 2.

Price 4 As. By Post 5 As.

உ

கடவுள்துணை.

வேமனநீதிவெண்பா.

முதல்பாகம்.

கடவுள்வணக்கம்.

ஆதிநடு வந்தமிலாற் கன்புசெயில் வேமனனூல்
ஆதிநடு வந்த மருந்தமிழில்—ஓதமிக
அந்தம் பெறுமிவ் வகிலத்தென் றவ்விறையைச்
சிந்தையிலி றைஞ்சுதுமே தேர்ந்து.

அவையடக்கம்.

வேதாந்தா சாரியெனும் விப்பிரகு லோத்தம
னென், மீதார்ந்த வன்பினால் வேமனனூல்—நீதா
ராய், தென்மொழியி லென்றுரைக்கச் செப்பலுற்
றே னுரைசயினால், நன்மொழிதேர் நாவலீர் நான்.

நாப்பழக்க மில்லே னெனிநாப் பழக்கமுற்றோர்,
மாப்பழக்கத் தாற்பாட வாய்திறந்தேன்—யாப்பமு
த்தம், இன்சொலிலே யேனு மிளங்கிளளை சொற்
போலென், புன்சொலேயுங் கொள்வீர் பொறுத்து.

நூலாசிரியர் வணக்கம்.

உலகத் துயர்ந்தசிவ யோகி யெனவே, இலகிய
நல் வேமனனை யென்றும்—உலகதனில், போற்று
விரோற் புண்ணியர்கள் புத்திமுத்தி நேர்வனவ,
ாற்றவுமேசெய்தின்னருள். (க)

உரையா டெனினுநீ யொன்றுமுரை யாடா
யுரையா டையாவலிதென் னேடிங்—குரையாடு
மையாநின் மாற்ற மறிகுவல்யான் கண்டாயே
மெய்யான வேமா விரைந்து. (௨)

நூல்.

ஆத்துமத்தைச் சுத்திசெயா ராசாரத் தாற்பய
னென், பாத்திரத்தைச் சுத்திசெயார் பாகமெவன்-
ஏத்துறுநல், சித்தசுத்தி செய்யார் சிவபூசை யாற்
பயனென், வித்தமுறு வேமா விளம்பு. (க)

போற்றெருநன் னீலமணி போதுந் தளபளெ
னத், தோற்றுமணி தட்டிருந்தென் தொல்லுலகில்-
ஊற்றநேர், பாவொன்றே போதும் படித்துப் பொ
ருளுணரத், தேவொன் றியவேமா தேர். (௨)

தலைவன் தனைநினைக்கில் தன்னை மறப்பன்
அலையுந் தனைநினைக்கி லந்தத்-தலைவனையே[தெவ்வா
தான்மறப்ப னுண்மகனுந் தானிரண்டைக் காண்ப
றான்மறந்த வேமா வுரை. (௩)

இன்புற்றான் யாவ னிகமதனி லின்பின்றித், துன்
புற்றான் யாவன் துணிந்தறியில் - மன்புவிக்கோர்,
சாட்சியெனுஞ் செங்கதிரோன் தண்ணீர்க் குடத்
தொளிரக், காட்சியொக்கும் வேமனனே காண். (

அத்தத் தமைத்த வரியபொலன் கூடதனில்
வைத்திட்ட தீபம் வயங்கலெனச்-சித்தந்
தெளிந்தவர்கள் தம்முடலில் தீதற்ற ஞானம்
விளங்குமால் வேமா மிக. (ரு

கடைத்தரத்துக் கள்ளகுரு கன்மத்தி னூட்டும்
நடுத்தரத்தோன் மந்திரத்தி னூட்டும்-அடுத்தவனை
உத்தமன்றான் யோகத் துயர்நிலையி னூட்டுமே
சித்தமதில் வேமா தெளி. (சு)

அன்னமிட்டுத் தாக மதுதவிரா மானிடர்தாம்
என்னபலன் பெற்றிடுவா ரிப்புவியில்-அன்னோர்
இறந்தென் மடிந்தென் பிறந்துபுற்றிற் செல்லும்
இறந்திலைகொல் வேமனனே யெண். (எ)

தாமளித்த மக்களுடன் தம்மை யளித்தவரும் [ல்
தாமிறத்தல் தங்கட்கோர் சாட்சியன்றோ-தாமுலகி
ஓர்பிரம கற்ப முயிர்தரிப்ப தெவ்வாறே
சீர்பெறுநல் வேமனனே செப்பு. (அ)

ஞானமிலான் பன்னூ லலனுணர்ந்தா னேனுமவன்
தானுணரக் காலவனை சற்குணனும்-தேனருந்தா
மண்டேகந் தாமரைமேல் வந்தமரம் மட்டுகனங்
கொண்டதுபோல் வேமா குறி. (கூ)

மானனைக் கண்டளவின் மால்பெருகிக் காமுகனுந்
தானா னொழிந்து தளர்வெய்தும்-தானனும் [தோ
விட்டிறனைக் கொல்கின்ற வெந்தீக்கண் டென்னந்
ஏட்டுறல்போல் வேமா விது. (கய)

புல்லசமான் காலரவம் போந்துணமண் வெங்கிருமி
நல்லுணவாத் தந்ததுபோ னுதன்றன்-வல்லநிலம்
தாங்கு முயிர்கள் தமக்கெல்லா முண்டிதனை
ஆங்கமைத்தான் வேமாநன் காய்ந்து. (கக)

என்சொலினு மாந்த ரியற்கைக் குணமாரு
கொன்றுமலி வாலின் குணக்கரு-தன்மையிலாள்[த்
கொண்கனையு மாறவிலே கூறுவளே கூடையில்லை
தெண்ணமின்றி வேமா விவண். (௧௨)

வேர்ப்புழுவோர் தாருதனை வீழ்த்துங் கொடிய
தெனுங், கோற்புழுதான் பூடழிக்குங் கோளுனைப்
போன் - சேர்க்கையினுல், நல்ல குணவாள னுளில
த்தி லோகெடுமால், ஒல்லேயிது வேமா வுணர். ( )

உப்புமுயர் பாலுகமு மோர்நிறத்த தானுலுஞ்
செப்புருசி வேருகுந் தேறுங்கால்-அப்படியே [ண்
மானிடருட் புண்ணியரன் மாந்தரும்வே றுண்டுகா
ஞானமுள வேமனு நாடு. (௧௪)

சீவ னுடல்விடுமுன் சீவன் தனையுடலில்
மேவுகற்ப முண்டமர்த்த வேண்டுமே-சீவனுடல்[ம்
விட்டுப் புறப்படினே மெய்ந்நிறுத்துங் கற்பமென்னு
கட்டலெவன் வேமனனே காண். (௧௫)

கள்ள நிசமிரண்டுங் கண்டறிவ னீலகண்டன்
தெள்ளுபுனல் பள்ளந் தெரியுமே-யுள்ளத்தில்
தாயறிவள் தன்மைந்தன் தான்பிறந்த வாறென்பர்
மாயமறு வேமா மதி. (௧௬)

அங்கந் தளர்ந்து மரும்பல் லுதிர்ந்துமிகப் [ற்றும்
பொங்கியதோர் மூப்பைப் புணர்ந்துதிடன்-பங்கமு
ஆடவர்புன் சிற்றின்பத் தாசைவிடா ரென்கொலோ
சேடனிகர் வேமனனே செப்பு. (௧௭

ஒண்டொடியார் தம்மை யுயர்நிதியை யுண்டிடுமின்
பண்டமதை நோாகப் பார்த்துருசி-கண்டறியில்
ஆடவரு ளுத்தமர்க்கு மங்கவற்றிற் பற்றறுமோ
நாடியநல் வேமா நவில். (கஅ)

தகுதியலாத் தானமதில் தன்னையுயர்த் தற்க
தகுதியொடு தானடங்கல் தாழ்வன்-றகலிடத்தே
ஆன்ற மலையதுகண் ணாடிதனிற் சிற்றுருவாய்த்
தோன்றுதோ வேமனனே சொல். (கசு)

தன்னுளத்திற் சூதுளதேல் தன்னைப்போ லெல்ல
வருந், தன்னிடத்திற் சூது தழைத்துநிற்பர்-தன்னு
ளத்தில், சூதிலதேல் தன்பாலோர் சூதுசெய்வா
ரின்றுலகில், கேதமறு வேமனனே கேள். (உ0)

தன்னைக் கொலத்தகுமோர் சத்துருதன் கைப்ப
டினும், இன்னா செயாதவனை யிட்டமுடன்-நன்னய
ங்கள், பாராட்டிப் போவென் பதுவே மரணமொக்
கும், சீராரும் வேமா தெளி. (உக)

வினைவி லொருகருமமேவற்க மேவின்
வினைவிலது வேதனையாய் மேவும்-தனைமிசையே
காயெடுத்துக் கீழெறியி லுண்ணக் கனியாமோ
நேயமொடு கேள்வேமா நீ. (உஉ)

நீர்க்கண் மரக்கலந்தா னின்றுமிதந் தோடுமெல்ல்
நீர்ப்புறத்தி லோர்முழமு நேர்ந்தோடா-பார்க்குள்
நிலைபிரியில் வல்லுநர்க்கு நேர்படலொன் றில்லை
நிலைபிரியா வேமனகே ணீ. (உங)

நீரிற் கராநீந்தி நீளிபத்தைப் பற்றியடும்
பாரிலது நாய்பற்றப் பாழ்படுமே-தேரிலிது
தானவலி யல்லாது தன்வலியொன் றில்லைகேள்
ஞானமிகு நல்வேம னு. (உச)

சந்தனத்தா னல்லவனந் தானெளிரு மாறுபோ
ல், நந்துகுலத் தோர்மைந்த னற்குணனாய்-வந்துதி
க்கில், அன்னவன ருங்குணத்தா லக்குலமு மாட்சி
மையே, மன்னுமிது கேள்வே மனு. (உரு)

கோலமைந்து பத்தாக் குருளைதரு மோரீற்றில்,
மாலிபமொன் றேயீனு மற்றதுபோல்-சாலவுநல்,
உத்தமனாய்த் தோன்றுமெனி லோர்புதல்வன் போ
தாதோ, வைத்துணர்க வேமா மதி. (உசா)

மதியுள்ளாற் கற்பிக்க மாட்டுவரோ யாரும்
மதியில்லாற் காருணர்த்த வல்லார்-நதியென்ற
ஆற்றின் வளைவெடுப்பா ராரோ புடவியினில்
மாற்றுயரு நற்குணவே மா. (உஎ)

அற்பகுணன் மிக்கவுரை யாடுமதி யுத்தமன்றான்
இற்புறவே மெல்ல விசைக்குமால்-சொற்பெரிய
கஞ்ச வொலிபோற் கனக மொலிசெயுமோ
விஞ்சுபுகழ் வேமா மிகுத்து. (உஅ)

கயவர்தமை மெச்சுங் கயவ ருலோபி
வியனறுமஞ்சு ஞானிகுண மெச்சும்-பயனில்லாப்
பங்கமெச்சும் பன்றியது பன்னீரை மெச்சுமோ
துங்கமுறு வேமா தொடர்ந்து. (உகூ)

கங்கையது பாயுங கதிகொண்டு சத்தமிலா
தங்கிரைச்ச லிட்டோடு மற்பநதி-இங்கதுபோல்[ள்
மேன்மக்கள் தம்பொறுமை மேவுவரோ கீழவர்கே
தான்மிக்க வேமனனே சார்ந்து. (௩0)

ஈனமுறு மோர்கொடியற் கீந்து பொருள்கடனுய்
த்,தானதுறப் பின்னலேதல் தாழ்வாமே-பூனேயோர்,
கோழிதனைக் கவ்வியக்காற் கூப்பிட்டால் வந்திடு
மோ, கேழுமுயர் சீர்வேமா கேள். (௩க)

ஈகை யிலாவுலுத்த னில்லத்தோர் சாவெய்திப்
போகப் பிணமும் புறப்பட்டால்-சோகமுடன்
பொன்னளித்துச் சுட்டிடற்காப் பொன்போச்சு தெ
ன்றழுவன், இன்னபல வேமா விசைத்து. (௩உ)

கடடப் படுமுலுத்தன் காசு தனைக்கவர்வான், இ
ட்டமொடு தாழ்ந்தவன்பின் னேழைசெலும்-நட்ட
விது, சம்பு தகர்நாடித் தானதன்பின் சென்றதொ
க்கும், நம்பனருள் சார்வேம னு. (௩௩)

உலுத்தற் கொலவுலகி லோர்மருந்தும் வேண்டா
வலுத்ததென வுண்டோர் வழிதான்-உலுத்தன்பால்
நாடிப்பொன் கேட்டளவி னுடாது வீழ்ந்திறப்பன்
வாடிமிக வேமா மனம். (௩ச)

மொழிவதெலாம் பொய்யுளமோ மோசக் குறை
யுள், வழுவொடுமான் மாவிருந்தென் வாழ்ந்தென்-
மொழிவதொன்று, சத்தியமே லாண்டு சதமாயு ளு
ண்டிதுகேள், நித்தனருள் சார்வேமா நீ. (௩ரு)

கைத்துண்டாம் போழ்து கரப்பன் றனைச்செருக்
கால், வைத்திலம்பாட் டில்லை வழங்கவொன்றும் -
இத்தகைய, இவ்விரண்டி னுலு மிடும்பையுறுக் கா
லமுண்டோ, தெவ்வகன்ற வேமா தெளி. (கூசா)

கண்டு மெதிர்நிற்கக் காண்கிலான் வாய்திறவான்
அண்டுமொழி கேட்டு மதுகேளான்-வண்டனதன்
ஏமாப்பிற் செய்வ னிவன்மதியிற் சன்னியுண்டே
மாமாயை நீத்தொளிர்வே மா. (கூஎ)

தீர்த்து முடிவுசொலத் தேரா வதிபதியென், சே
ர்த்து முடித்தவிழ்க்காச் சேதனமொன்-கூர்த்தவன்
பால், நீரன்ன நேராத நீள்வாய்க் கொடையாலென்
றீரனெனும் வேமா தெளி. (கூஅ)

தானுமுணுன் ஆப்தர் தமையு மனுகவொட்டான்
கானுறையு மானேர் கருமிதான்-மானிடன்போல்
நெற்புலத்திற் புல்லுருவ நிற்குந் தகைத்தரோ
நற்பதவி சார்வேம னு. (கூகூ)

தானமது முற்பிறப்பில் தான்செயாப் பாவிதான்,
ஆன பொருண்மே லவாக்கொள்ளல்-பானலிலே,
வித்திடம றந்து விரைந்தறுப்பான் செல்வதொக்கு
ம், கத்தனருள் சார்வேமா காண். (சo)

ஒள்ளியகற் றீப மொளிர்தருநெய் யுள்ளமட்டும்
தெள்ளியநெய் மாளினே தீபமறும்-உள்ளிதுபோல்
நீளாகம் போங்கா னினைவுமுடன் மாயுமே
கேளாய்நீ வேமா கிளைத்து. (சக)

அண்ணலரு ணம்பி யகிலந் தனையழிப்போன்
எண்ணில் குடிச்சாப மெய்திக்கீழ்-நண்ணுமிக
மேலெறிந்த பந்துநிப மெம்மட்டு மேவிநிற்குஞ்
சீலமுறு நல்வேமா தேர். (சஉ)

அங்கொருநா டில்லை யகந்தனக்கு மற்றதுதா
னங்கருமத் தேகலந்து நண்ணுமால்-இங்கதனுல்
கன்மம் புரியாது கண்டுணர்ந்து நிற்கைநன்றே
மன்னுமரன் தாள்தொழுவே மா. (சங)

சம்புவின் தந்திரமுந் தக்கநய முந்தேர்ந்து, நம்பு
பொருளீட்டிவைப்ப னன்றுதவான் - அம்புவியில்,
நன்மையிலா நாய்க்கூட்டி னல்லன்னஞ் சிந்திவைத்
த, தன்மையிது வேமனனே தான். (சச)

இறக்கையிலு மீண்டு பிறக்கையிலு மேகா, சிறக்
கவங்குந் தான்கொண்டு செல்லா - னிறக்கையிலே,
தானெங்கு செல்வனே தன்செல்வம் போவதெங்
கோ, நானுண்ட வேமா நரன். (சரு)

தொக்கெடுத்த வப்போழ்தில் துஞ்சறனி லூர்ச்
சுற்றில், நக்கனெனச் சீவனின்று னன்றியற்றி - மிக்
கென்னே, வுள்ளநாண் மட்டு முபகாரி யாகிலனே,
கள்ளமறு வேமனனே காண். (சசு)

காசிக்குப் போகக் கனதீர்த்தத் துண்மூழ்க
ஆசைப் படுவதனு லாவதெவன்-மாசுடைய
பாதகற்குக் காசிப் பதிமேவல் கிட்டுமதோ
கேதமறு வேமனு கேள். (சஎ)

இருகாலோர் முக்கா லிரும்பொடியிற் கொல்லன்
எரிகாய்ச்சி நீட்டி யிணக்கும்-ஒருகால்
மனமொடியிற் கூட்டியொட்ட வல்லுநரிங் காரோ
கனமுடைய வேமனனே காண். (சஅ)

பிறனில்விழை யாதும் பிறன்பொருள்வெள வாதும்
பிறர்க்கிதஞ் செய்தும் பெரிதே-பிறர்முனிந்தும்
உள்ளமுனி யாது முலகெண்ணா வாழ்தரூஉம்
தெள்ளறிஞன் வேமா தெளி. (சகூ)

அஞ்ஞானஞ் சூத்திரத்வ மந்தமுறு ப்ராமணத்வம், மெய்ஞ்ஞான மென்றுரைக்கும் வேதமே-மெய்ஞ்ஞானம், பெற்றுவான் மீகி பிராமணத்வ மேவினறல், பற்றறுநல் வேமாநீ பார். (ரு௦)

தோயத் துறைமச்சந் தூண்டி லிறைச்சிக்கு
நேயமுற்றுப் பற்றவதி னீங்குமுயிர்-ஆயதுபோல்
ஆசைவலைப் பட்டானே லந்தோ நரன்கெடுமே
மாசறுநல் வேமா மதி. (ருக)

அருத்தி நிதம்வளர்க்கு மங்கமுடை யோனர்
பெருத்தன்பிற் காக்கும் பிராணன்-உரித்தெவற்கு?
செந்தனம தாருடைமை? தேரில் தருமமொன்றே
நந்தமது காண்வேம ஞ. (ருஉ)

நாரா யணவோ நமசிவாய வென்றுமிகப்
பாரா யணஞ்செய்வன் பார்ப்பவரும்-நேரோ
பாசுவொன் றூலும் பரிவொடறஞ் செய்யான்
கருமியன்றோ வேமனனே காண். (ருங)

கட்புலனிற் பொன்னெக்கு மத்திக் கனியதனைப்
பிட்டாற் புழுவிருக்கும் பேடனே-பெட்டுப்
பெருமகனிற் பாவிப்போன் பேதைமையிவ் வாறே
கருமமகல் வேமாநீ.காண். (ருச)

மேதித்தோ லாய வினைத்துருத்தி யூதிடவைந்
தாதுக்க ணீரூந் தழற்பட்டு-மேதினியில்
பேரறிஞர் நொந்தாற் பெருந்தழல்வா னண்ணுதோ
மாரனைவென் றங்கொளிர்வே மா. (ருரு)

மருந்துண்டாற் காயமது மாறுமே மற்றோர்
மருந்துண்டீ மாது வசமாம்-மருந்தொன்று
வேறுளதுண் ணோய்தீர்க்கும் வேறுளதுண் மெய்வ
லுக்கும், மாறறுமெய் யோகுறுவே மா. (ருசா)

தலைப்பாகை மேலுத் தரியமெழில் தொங்கி
விலைப்போஞ் செவிகடுக்கன் மின்ன-மலைத்தேழை
செல்லும் பிசுனன் பசுவென்று த் தேர்கிலனென்?
நல்லநிலை சார்வேம ணா. (ருஎ)

மடவார் கலவி மயக்கத்துண் மூழ்கித்
திடமாய் மனதுவசஞ் செய்யா-விடலைமெயா
யாற்றங் கரையிருக்கு மம்மரத்தைப் போற்கெடுமே
சாற்றருசீர் வேமனனே தான். (ருஅ)

கூலிக் குழைத்துங் கொடுமிடிமைப் பாடுபட்டு
ஞ், சாலப் பொருள்கொண்டு தானில்லாள் - பால
ளிக்கிற், போற்றுவா ளின்மை புகிற்கணவற் பற்பல
வாய்த், தூற்றுவாள் வேமா துணிந்து. (ருகூ)

இந்திரியத் துள்ளா னிகழ்கடைநற் பத்தியுண்டே
ல், இந்திரியத் துள்ளா னெனினுமிடை - இந்திரி
யம், வென்றவனே யுத்தமன்மால் வென்றுதனைக்
கண்டானேல், நன்றிறைவ னும்வேம னு. (சுo)

தன்னுடைய தீக்குணந் தாமாறு துள்ளிருக்கத்,
தன்னுளத்தின் மற்றொருவன் தன்குணத்தை - யுன்
னலெவன், தன்மதியைத் தேராது தானயற்காத்
துக்கிப்போன், கொன்மனிதன் வேமா குறி. (சுக)

பேதை யெனினும் பெருங்கூத்த னுமயத்தன்
சாதுவெனு மாயோகி தானெனினும்-மாதருரு
கண்டக்கா லுளளத்திற் காத லெழுதருமே
மண்டுமெய லற்றொளிர்வே மா. (சுஉ)

இருக்கும் பதிக்கோ ரிடமெய்தின் மற்றோர்
இருக்கைவள மாநாடி யேகல்-பெருத்தநலம்
வாவிவற்றி னுனா வசிக்குங்கொ லன்னனே
பாவமற்ற வேமனனே பார். (சுங)

புண்ணியநன் மாந்தர் புவியிலரோல் வெந்தழலோ
ன், உண்ணலன்றி யிப்புவியு மோங்குமதோ - புண்
ணியர்தாம், இங்குமங்கு முள்ளா ரிவண்முழுது
மில்லையன்றே, பங்கமறு வேமனனே பார். (சுச)

சித்தசுத்தி யெய்தியறஞ் செய்யிற் சிறிதெனினும்
வைத்தபல னற்பமன்று மாபெரிதே-மெத்தவிரி
ஆல மரத்துக் கதன்விதைதா னெவ்வளவோ
சீலமுறு வேமாநீ தேர். (சுரு)

கெட்டவனைத் தெய்வங் கெடுக்குமிக வாபத்திற்
பட்டுழியு மீட்கவுமே பாராதே - பட்டும்
விளையாப் புலங்கண் டுடையவனே மெச்சும்
களியார்ந்த வேமாநீ காண். (சுசு)

பாச மதிகப் படுமாகிற் பித்தரைப்போல்
நேச மறத்திரிவ னீனலகில்-பாசந்தான்
நாய்போ லலைய நரன்றன்னைப் பண்ணுமால்
சேய்போன்ற வேமாநீ தேர். (சுஎ)

பெருமாயப் பொய்மிகவே பேசுமவ னில்லந்
திருமாது வாழ்தருமோ தேரில்-திருவாழ்தல்
பொள்ளற் குடந்தன்னி னீர்மொள்ளல் போலுமே
வள்ளற் குணமுறுவே மா. (சுஅ)

மாண்புடைய நன்மனையாள் வாழுமக நன்றொளி
ரும், மாண்பினளி ருட்டறையின் மாதீபம் - மாண்
புடையாள், வாழுமக மாதேவர் வாழ்கோயி லொக்
குமே, வாழியகே ணன்றுணர்வே மா. (சுகூ)

மனைவிதனை விட்டிருத்தி மற்றொருவ னானு
மனைவிதன்பா லேகு மனிதன்-கனப்பித்தன்
பானவினெல் விட்டுப் பதர்பொறுக்கு மாறெவனோ
ஊனலறு வேமா மதி. (எ0)

அரச ருளந்தா ணமர்க்களத்தி னிற்கும்
பரமுனிவ ருள்ளம் பரத்தே-திரமுறுமால்
காமமுறு மற்பருளங் காரிகையார் மேனிற்கும்
காமமறு வேமனனே காண். (எக)

தந்தைதாய் தம்மேல் தயையில்லாப் புத்திரன்
ருன், வந்துதித்தெ னீண்டவன் மாய்ந்திடிலென் -
அந்தமிலாப், புற்றிற் பிறந்திலேயோ புன்சிதலே மா
ய்ந்திலேயோ, மற்றதொக்கும் வேமா மதி. (எஉ)

காயத்தின் முற்பட்ட காயத்தை யாற்றுதற்குத்
தேயத்தி லுண்டே சிலமருந்து-தீயதெனும்
மாநிந்தை மாற்ற வலமருந்து முண்டுகொலோ
வானின் ளெளிர்தருவே மா. (எங)

தத்துவநன் காய்ந்துணர்ந்தோன் தன்பதியைக்
கண்டடைவன், அத்திரனிற் கொல்லுவா னுசை
யெலாம் - தித்திக்கும், வாழைக் கனியுண்டோன்
வன்னஞ்சை யுண்பனோ, வாழ்வுறுநல் வேமா மதி.

நீரிற் குமிழியது நின்றக்கா னீரோட்டம்
நேரி லதையழிக்கு நீர்மைபோல்-தேரினரா [ன்
பாழ்படுமட் பாண்டநிகர் பாழுடற்குப் பற்றறலெ
தாழ்வகன்ற வேமனனே சாற்று. (எரு)

ஏமசித்தி பெற்றுள்ளோ ரின்மை வருத்தமறத்
தாமுலகில் வாழ்கின்ற தன்மைபோன்-மாமனிதன்
தத்துவங்கண் டானேல் தனக்கொன்றுந் தாழ்விலை
காண், வத்துணர்சீர் வேமா மதி. (எசு)

சீவ னுடலுறவு தேரின் மதியழியா [செய்
தேவனேயே,கண்டிடவுட் செவ்வியதா - மாவொளி
ஞானவொளி யுள்ளோங்கு நைந்திருளு மாயுமே
ஞானமிகு நல்வேம னு. (எஎ)

ஆசையினன் மானிடர்தம் மாயு ளலைந்தொழிப்
பர், பாச வலையறுக்கப் பார்த்திலார்-வாசனையால்,
ஈழுமுறு பாண்டத்தை யிமொய்த்த தன்மையிதாம்,
பாழுகன்ற வேமனனே பார். (எஅ)

மாபரிச வேதியினல் வல்லயம்பொன் னகுதல்
போல், தீபவொளி கர்ப்பூரஞ் சேர்ந்ததுபோல்-தா
மறைப், பூமணம்போ லான்மாநற் பூரணனைக் கூடு
தலே, மாமுத்தி வேமா மதி. (எகூ)

பாண்ட முடைந்ததெனிற் பாரிற் புதியதொரு
பாண்ட மதுகொளலாம் பாடின்றி-யீண்டுநரன்
கூடுடையி லிக்கூட்டைக் கூடலென்றல் கூடுமதோ
வீடடைந்த வேமவினி மேல். (அ0)

தள்ளரிய பூசைசெபந் தான்செய்துந் திக்குணத்
தோர், கள்ள நினைவுதனைக் கைவிடார்-உள்ளத்தே,
முத்தி யடையகிலார் மொய்யிருளின் மூழ்கினரால்,
இத்தகைமை வேமனனே யென். (அக)

நிலையெல்லாந் தான்கடந்து நின்றொளிரு மேலா
ந், தலமென்ற மேலுலகந் தன்னில் - பலவடிவம்,
அற்றவிடத் தேஞானி யப்பரமீ தென்றுணர்வான்,
பற்றறுநல் வேமாநீ பார். (அஉ)

சத்தியஞ் சார்தருமேற் சார்தருமே மெய்ஞ்ஞா
னம், வித்தமதாற் சத்தியமு மேவுமே - ஒத்திரண்
டுந், தான்சமனுக் கொண்டவனே தக்கநெறி யந்த
ணனும், வான்கதியுற் றங்கொளிர்வே மா. (அங)

தானமதன் மேலாஞ் சருவேசன் றியானமே
ஞானமதன் மேலா நவிலுங்கால் - ஞானமதன்
மேற்பால் தாசையினை வென்று விளங்குதல்காண்
மாற்பாறு நற்குணவே மா. (அச)

கள்ள மொழியாடிற் கைப்படுமோ மோட்சமெ
ன்றுந், தன்னுபய னில்பிதற்று தான்செல்லா - கள்
ளநெறி, மேன்மைத் தரத்ததல மிக்கமதி யினங்கா
ண், ஞானமுறு மாவேம ஞ. (அரு)

காற்றறியாத் தீபவொளி காணு மலைசுழலொன்
றேற்றறியா வாழி யிவைபோலப் - போற்றுகின்ற
நிச்சலமா மான்மாவு நிர்விகா ரத்தொடுறில்
மெச்சுமுத்தி யீதுவே மா. (அசு)

செந்தழலொண் டாதுவினிற் சேர்ந்ததெனக் கூ
ர்ாணி, பந்தமுற வேமரத்திற் பாய்ந்ததென - நந்து
சுவர்ச், சித்திரம தென்னத் திகழுடலிற் சீவனிற்கு
ம், அத்தன்மை வேமா வறி. (அஎ)

மறந்தலையைத் தாழ்த்தியென்றும் வாட்டுதற்கோ
ர் மூலம், அறமலியு நல்லுண்மைக் கான்மா - திறமூ
லம், இவ்வுண்மை தேர்பவனே யெண்ணுங்கால் தீர
னும், இவ்வுலகில் வேமனனே யெண். (அஅ)

உன்னியுளா யாடாட வுள்ளன்பு நீடிக்கும் [ல்
தின்னத் தினவேம்புந் தித்திக்கும் - பன்னிவைபோ
சாதகத்தா லெத்தொழிலுந் தாரணியிற் சாத்தியமா
ம், தீதகற்றும் வேமா தெளி. (அகூ)

தோன்றுகின்ற நேத்திரமே தூலமா நேத்திரத்
துள், ஆன்றமணி சூக்குமமா மம்மணிக்குள் - தோ
ன்றுவதே, காரணமாய் காரணத்துட் காணும் பிர
மவொளிச், சீருருகாண் வேமனு தேர். (கூ0)

தேன்கூட்டி னுண்மார்க்கம் தேனீ யறியும்ரதம்
தான்கூட்டும் வண்டறியுந் தாலத்தே - வான்கூட்டு
நல்லபர ஞானி நலமறியும் பத்தன்காண்
வல்லனெனு மாதவவே மா. (கூக)

அடவிதிரிந் தாவதிலே யாகாசத் தில்லை
புடவிபல தீர்த்தங்கள் போயும் - அடையாய்
உடற்சுத்தி செய்தங் குடையவனைக் காண்பாய்
திடமுடைய வேமா தெளிந்து. (கூஉ)

ஊனமறு கர்ப்புரம்போ லுள்ளமுறும் யோகிதன்,
ஞானச் சுடர்க்கொழுந்தாய் நன்றொளிர்வன் -
தானிதமும், அங்கிலேயி லேமுதிரி லாங்கடைவ னெ
ண்ணியதே, மன்னுபுல வோர்தொழுவே மா. ()

நீயுரைப்ப தியானுரைப்பே னின்னு ளயிக்கியமாய்
நீயுறையு மத்தலத்தி னின்றுறைவே - னேயமுடன்
நீநினைப்ப தியானினைப்ப னீநகம்மற் றியானகுவன்
ஞானநெறி சார்வேம னு. (கூச)

நீரதுவே காரமதாய்க் காரமே நீராகும்
காரமதா நீரேபின் காரமாம் - பாரினிலே
காரவுப்பி னீருங் கலந்து மிகவொன்றும்
சீரிதனை வேமா தெளி. (கூரு)

தக்க சிவானுபவம் தானடையாச் சாதகர்க்குப்
புக்கவைய நீங்கா புவிதன்னில் - மிக்கொளிரும்
சோதியின்றி நீங்குமோ துன்னிருளுந் தான்சொல்
லாய், நீதிமிகு வேமனு நீ. (கூசு)

இந்திரியத் தால்வருந்து மேமை மதியுடையோன்
சிந்துலகி லேசிவனைத் தேடுவனே - இந்திரியப்
பாச மொழிக்கிற் பதிகாண்பர் மானிடர்தாம்
நேசமொடு கேள்வேமா நீ. (கூஎ)

தேனுண் டகடுமிகத் தேக்குமவன் பாலுண்ணத்,
தானெண்ணு மோவிதுபோல் தத்துவமெய்ஞ்-ஞா
னத்தால், உண்மை யறிந்தபின ருள்ளதத்வ மேது
க்கோ, வண்மையுள வேமா மதி. (கூஅ)

உத்தமரு ளுத்தமன்கா ணுண்மைநிலை கண்டுணர்
ந்தோன், மத்திமனே பூவின் மகிமைசெய்வோன் -
மெத்தவே, மேட்டை வளர்க்கின்ற வேடத்த னே
யதமன், வாட்டமறு மாதவவே மா. (கூகூ)

இதையத் திருக்கின்ற வீசனைக்கா ணும
னிதமுஞ் சிலைவணங்கி நிற்போர் - மதவிலங்கே
சீவனில்வாழ் தேவிற் சிறந்தபொருள் கல்லிலுண்
டோ, பாவமறு வேமாநீ பார். (க00)

ஆனின்பாற் போதுங் கரண்டியள வத்திரிபால்
சானிரம்ப வாயிடினுந் தானென்னும் - தானன்பால்
கைப்பிடிய தன்னங் கனிந்தளிக்கிற் போதுமே
ஒப்பறுநல் வேமா வுணர். (க0க)

பாறைமிசைக் கூவலொன்று பாடுபட்டுத் தோண்டிடினும், ஊறுமிகு மன்றிமுடி வொன்றில்லை - யூறுநல, பள்ளத் தகழ்குழிதான் பாலிக்கு மோர்குலமே, நள்ளரிய சீர்வேமா நாடு. (க0உ)

கரும்பிள்ளை கூட்டிற் கலந்தகுயில் போலும்
பெருங்குளவிச் சார்ந்தபுழுப் போலும்-தெரிந்தொருவன், தேசிகன்றாள் போற்றுமெனில் தேசிகனே தானுவன், மாசிகந்த வேமா மதி. (க0ந)

சொல்லைத் திருத்தலாஞ் சொற்பிழையொன் றில்லாமற், கல்லைத் திருத்தலாங் காசினியி - னல்லதெனச், சிந்தை திருத்துதற்ன் சேதனர்க்கு மாகாதே, பந்தமறும் வேமனனே பார். (க0ச)

மானசத்தின் முத்திபெறு மார்க்க மதுவிருந்தும், மானசத்தைக் காணுகிலார் மற்றதனை - மானிடர்தாம், கட்டுகிலா ரிவ்வுலகிற் காலன்கைப் பட்டந்தோ, கெட்டழிவார் வேமனு கேள். (க0ரு)

மானசமே முத்திக்கு மாமூல மென்றுணரார்
மானசத்தின் கைவசமாய் மாய்ந்திட்டார்-மானசமே
தானு யிரகசியந் தானுணர்ந்தோன் யோகிகாண்
வானு டைந்தொளிர் வேமா. (க0சு)

மதிகண் டுணர்ந்தவரிம் மண்மீ திலைமற்
றதுகண்டோற் காண்ப தரிதே-மதிகண்டோன்
ஞானக்கண் கொண்டுடலி னல்லபரங் காண்கிற்பன்
ஊனமிலா வேமா வுணர். (க0எ)

மனநினைவோ டுள்ளமட்டு மாப்பிரமங் காணு
தனுவைத் தெளியாக்கித் தானின் - றுனிவீண்
உலக நினைவொழித்தங் குள்ளக்கண் கொண்டெண்
ணிலவுபொருள் காண்வேமா நீ. (கoஅ)

நினைநோக்கில் ஞான நிரம்புமே நாளும் [ன்
தனைநோக்கில் மாயைவந்து தாக்கும் - பினைத்தானி
தன்னை யுணர்ந்தக்கால் தானே தனைக்காண்பன்
நன்னலமார் வேமாநீ நாடு. (கoகூ)

தேக முடிவில் திகழ்தருகால் காற்கலக்கும்
மாக மதுகலக்கு மாவெளியில் - வேகமுடன்
மண்ணெரிநீர் சேருமின மற்றுன்மா நின்மலமாம்
திண்ணமிது வேமா தெளி. (கக0)

வேண்டித்தே டித்தேட வேதாந்த நாயகனும்
ஆண்டிறுவன் தேடு மவனையன்றேன் - வேண்டியே
தேடு மவனையந்தோ தேடுமறி வாளரெவர்
நாடிநித நல்வேம னு. (ககக)

நேசிப்போன் தன்னைமிக நேசிப்பன் தன்னையெ
வன், நேசியான் தானவனை நேசியான் - ஈசனெனில்,
மாய விடம்பத்தான் மாநிலத்தொன் றுவதிலை
நேயமுறக் கேள்வேமா நீ. (ககஉ)

தக்க வநுபூதி தான்பிறவாச் சாதகர்க்குப்
புக்கவைய நூலுணர்வாற் போகாதே - மிக்கழகார்
சித்திரநற் றீபந் திகழ்ந்திருளை மாய்க்குமோ
வுத்திமிகும் வேமா வுணர். (ககங)

சாந்தகுணத் தாலினிது தன்கருமங் கைகூடும்
வாய்ந்தவுண்மை வெற்றிதரு மற்றுஞ்சூ-ளாந்தலத்
நன்றுதான் பட்டதுய ரத்தனையு நற்றருமன் [தில்
வென்றனன்காண் வேமா மிக. (ககச)

தாரணியின் மாந்தர் தகுபரம யோகியினன்
னீரறியார் மற்றவனை நிந்திப்பார் - சாரமதிற்
கையறியு மோதான் கனவமுத சாரமே
மெய்யறிந்த வேமா மிக. (ககரு)

எத்தனையோ சென்ம மெடுத்துநரன் பாவமே
சித்தத்தஞ் ஞானத்தாற் சிந்திப்பன் - மெத்த
நினைவிற் புலாலுண்ணு நீர்மைமுட நாய்காண்
சினமற்ற வேமா தெளி. (ககசா)

பேரறிவு கொண்டொருவன் பேசமிகத் தேர்ந்த
க்கா, லேரிளமை மற்றவனு ளெண்ணுவதென் - தா
ரணியில், வாலிபன்கைத் தீபம் வயங்கியொளி வீ
சாதோ, சாலவுநல் வேமனனே தான். (ககஎ)

வித்துக் கிறைமுதனீர் வேர்ப்பற்ற மென்முளைதான்
மெத்த விரைவுடனே மேற்கிளம்பும்-சத்துடைய
அம்முளையே தான்வளர்ந் தங்குமர மாகுமே
மம்மரறுத் தேயொளிர்வே மா. (ககஅ)

காதலன்வாழ் நாளிற் கவலையுற்ற மாதொருதன்
காதலர்வாழ் நாளிற் களிப்புறுவாள் - ஓதெவரும்
இன்மைபொருள் பாகிப்ப ரீதில்லா மைந்தர்பலம்
வன்பலங்காண் வேமா மதி. (ககசு)

ஆறுசுவை வேரு மவற்றி லுருசியொன்றே
ஊறுசத்ய நிட்டைவே றுண்மையொன்றே - தேறு
சிவ, யோகியர்வே ருயிடினு மூன்றுபொரு ளொன்
றேகாண், பாகமுறு வேமாநீ பார். (கஉ0)

தாரகத்தைக் கண்டுணருந் தக்கநெறி யொன்று
ளது, நேருமதி லுட்சமனுய் நின்றுகண்டால்-சீரொ
ய்தும், உற்றுநன்று நோக்கிலேயே லுள்ளவொளி
பாறுமே, பற்றறுநல் வேமனனே பார். (கஉக)

நல்லவர்தங் கேண்மைவிட னன்றன்று ப்ரக்ரு
தியை, ஒல்லையுணர்ந் தாற்பத்தி யுண்டாகும்-தொ
ல்லைமிகு, பாவியர்தா மெவ்வாறு பத்தி யடைகுவ
வரோ, பாவலனும் வேமா மதி. (கஉஉ)

இவ்விழியில் வான்பிரம மெட்டுமதோ காண்பத
னுச், கவ்விழியு நோக்கும்வே ருகுமே - அவ்விழி
யால், உண்மேவு நாதனையங் குண்ணுக்க வேண்
டாவோ, மண்ணைய நீத்தொளிர்வே மா. (கஉா)

தூலச சுமையென்னத் தோற்று மவத்தையெலாம்
சாலவிகந் தாசையறத் தான்வீசி - மாவில்லா
உள்வா சனையை யுணர்ந்தோனே ப்ரம்மமாம்
கள்ளநெறி தீர்வேமா காண். (கஉச)

மண்ணுண் டுடுமென்னில் வன்சினத்திற் காய்வ
தெவன், மண்ணுதவு நன்று மறப்பதெவன் - மண்
ணன்றி, நீரிஞ் நன்று நினையா தொழிப்பதெவன்,
தேரினரர் வேமா தினம். (கஉரு)

சீவ னுறைவதெங்கே சிந்தைநினை வெங்ஙனே
தாவி யிருபொருளுந் தான்கூடி - மேவலெங்கே
இவ்விரண்டின் தான மெவனுணரார் மானிடர்தாம்
பவ்வமறு வேமாநீ பார். (கஉசு)

மண்மேற் பொருளீட்டி மற்றறமே செய்கிலா
துண்ணு தறியா தொளித்துவைக்கும் - வண்மதுவீ
கூட்டுமெயற் செல்லுமவர் கொண்டே கிலைகொல்
லேலா, வாட்டமுற வேமா மதி. (கஉஎ)

ஈயு மவர்செல்வ மெண்ணிறந்து தான்வளரும்
தேய்வின்று நல்குரவுஞ் சேருமோ - ஓயா
திறைக்கினுநீர் கூவ லினிதுசுரந் தீயும்
நிறைவெய்தி வேமா நிதம். (கஉஅ)

பாலிற் கலந்தநீர் பாலாகிச் சற்கருமத் [து
தேலுதல்போற் சாதுசங்க மெய்தொருவன்-ஞாலத்
மூடனே யாயிடினு முத்தி யடைவன்காண்
கேடகன்ற வேமாநீ கேள். (கஉகூ)

நல்கூர்ந்தார்க் கைக்கொண்டு நானிலத்தி லெந்
நாளும், அல்கா தவனைமிக வாதரிக்கும் - செல்வத்
தோன், என்றுமிடை நீங்கா தினியசிவ சந்நிதியி,
ன்றுறைவன் காண்வேமணா. (கங0)

ஒருவனைவஞ் சித்தொருவ னுண்ணுமவ னீட்டம்
வருநமன்வஞ் சித்தவனை மாய்க்கும் - பெருமடுவில்
மீனையொரு மீன்கொல்லு மீன்வலைஞன் மற்றதனைத்
தானிகுங்காண் வேமனனே சார்ந்து. (கஙக)

அந்தகனுங் காலிலியு மங்கிருவ ருங்கூடித்
தந்துதவி வாழ்ந்திடுமத் தன்மையெனச்-சிந்துலகில்
இல்லா னொடுகூடி யேழையும் வாழ்தருமால்
வல்லாய்நீ வேமா மதி. (கநஉ)

கற்பங் துடைக்கலாங் காணுமுயர் மாதிரமும்
பற்ப மெனப்பொடியாப் பண்ணலாம் - அற்பில்லா
மாந்தர்கள்வன் னெஞ்சுருகும் வண்ணஞ் செயலரி
தே, சாந்தகுண வேமனனே தான். (கநந)

மாசறுத்துள் ளன்பால் வணங்கியிறை தாணம்பிப்
பூசையொடு நிட்டை புரிகுவோன் - பேசுற்ற
இன்பவீடெய்தி யிகமதனில் வாழ்குவனால்
அன்புடைய வேமா வறி. (கநச)

தத்துவ முணர்ந்தானேல் தானெங்குந் தேடுவான்
தத்துவமுந் தானவன் தாலத்தே - நித்தம்
மனமிறந்து நிற்பவனே மாப்பிரமங் கண்டாய்
சினமிறந்த வேமா தெளி. (கநரு)

உரைக்கு மொழியொன் றுளநினைவொன் றங்கத்,
திருக்கு மியல்பதுவே றெண்ணும்-விருத்தியும்வே,
றுவதெனின் முத்தி யடைவதுண்டோ வெவ்வழி
தான், மேவும்வழி வேமா விளம்பு. (கநசா)

மங்கைதன் சுந்தரமு மற்றவடன் பக்குவமும்
அங்கணவன் தன்ன தருளின்றேல் - இங்கென்னும்
நல்லநரற் கவ்வாறே நாதனரு ளின்றுயின்
வல்லமையா லாவதென்வே மா. (கநஎ)

எவ்வளவு கட்ட மிருக்கின்ற தோமாந்தர்க், கவ்வளவும் பாவசிந்தை யாகுமே - செவ்வையிலா, வன்பவத்தாற் சிந்தைமிக வாடலின்றேல் வேமாகேள், பொன்ருத செல்வம் புகும். (கஙஅ)

எத்தனைநாள் தானிருப்ப னெத்தனைநாள் தான்கற்றிங், கெத்தனையாய் நற்கீர்த்தி யெய்துவான்-வித்தையெலாம், கொண்டிறப்பன் சின்னாளிற் கூறுமவை மண்ணுமே, வண்புவி யில்வேமா மதி. ()

செல்வ மதுவளரிற் சிந்தை மயல்வளரும்
புல்லதனுற் றீக்குணமும் பொங்குமே - செல்வங்
குறையின் மயல்குறையுந் தீக்குணமுங் குன்றும்
கறையகன்ற வேமனனே காண். (கசO)

யார்மொழியுங் கேட்க விசைந்துசினங் கொள்ளாதே, தேர்கவத னுண்மையினைத் தேட்டமாய் - நேர்மையொடு, கேட்டுணர்ந்தோ னென்றுங் கிளர்தருநன் னீதிபரன், வாட்டமற வேமா மதி. (கசக)

இக்கபட நாடகத்தை யிக்கபட வித்தையினை
யெக்கபட நாடக னியற்றினனே - அக்கபட
நாடகனைப் போற்றி நனியவற்சார்ந் தின்புறுவாய்
தேடிமிக வேமா தினம். (கசஉ)

செங்கதிரோன் காயச் சிதைந்திருண் மாய்ந்ததெனத், துங்க நிறைகுடத்திற் றோயந்தான் - றங்கலெனத், தான்றெளிந் துள்ளந் ததும்பா நிலையெய்தி வான்பரத்தைக் கண்டறிவே மா. (கசங)

காய்ந்துலர்ந்த மாமரங் காட்டகத்தே யொன்றிரு க்கிற்,றேய்ந்துதழற் பட்டனைத்துந் தீய்ப்பதுபோல்-காய்ந்தகுணத், துட்டமகனற்குலத்திற் ரேன்றுமெ னி லக்குலமும், கெட்டழியும் வேமனனே கேள்.()

சீடர் தமக்குச் சிவங்காட்டா தீனமதத்
தூடிருத்து மாசா னுயர்ஞானம் - நாடுங்கால்
சோளப் புனத்தினிற் றுன்புற்ற வானிகராங்
கேளிதனே வேமா கிளேத்து. (கசரு)

தன்மனையிற் செல்வந் தனமெனமண் ணிற்புதை ப்பன், கொன்னே யுலுத்தனெனுங் கொச்சைதான்-என்னே, இறக்கையிலுங் கொண்டேகா னேகா தோர் காசும், சிறக்கவவன் பின்வேமா தேர். ()

ஊர்நாடா னல்ல வுடைநாடா னீசன்றன்
சீர்நாடு மாத்துமத்தைச் சேர்ந்திருப்பன்-ஊர்நாடும்
வேடத்தா லாவதுவு மேடைக்கும் வித்தைகாண்
ஏடணைதீர் வேமனனே யெண். (கசஎ)

காணக் கரிதாய்க் கடிக்கிலுட் காரமுண்டாய்ப்
பேணு மிளகிருக்கும் பெற்றிபோல் - காணற்
கருமையதாய் நிற்கு மறிவுடைய மேலோர்
பெருமையது வேமா பெரிது. (கசஅ)

மாதிரத்துங் கானகத்தும் வாழ்தவத்தோன் றன் குணத்தைப், பாதகஞ்சேர் காமப் படுகுழிவாழ் - ஏதமுளோன், கண்டிடுமோ ப்ரம்மநிட்டை கைவந் தோன் பின்னேழை, யண்டிடுமோ வேமா வறி. ()

கத்தூரி காணக் கரிதாகி நிற்குமதன்
சத்தூர் பரிமளமோ தான்மணக்கும் - வித்தமுறு
தேசிகரா வார்குணமுந் தேர்ந்தறியி லிவ்வாறும்
மாசிகந்த வேமா மதி. (கருo)

காமங் களவிரண்டுங் காசினியி லோர்தகைத்தே
சேமமதிக் கஞ்சுந் திருடனெனக் - காமவிப
சாரிக்கு நெஞ்சந் தனிலச்சந் தோன்றுமால்
தீரமிகு வேமா தெளி. (கருக)

இறையின்றிக் கல்விமுறை யெய்துதலுங்கூடா
திறையின்றிக் காப்புறு விம்மண் - இறைகல்வி
யென்றிரண்டு மில்லா னிருபிறப்போர்க் குட்புகழு
நன்றுறுமோ வேமனு நாடு. (கருஉ)

அற்பசுக நேசித் தளவறுவெந் துன்பத்தி
னிற்குநரன் பாதை நெடிதுற்றே - யற்பமிலா
மேலாம் பரமசுக மேவித்தான் வாழறியான்
மாலாலே வேமா மதி. (கருங)

கால வசத்தாற் கருமமறந் தான்புரிந்தங்
கேலுநசை யான்மயங்கி யேநிற்பர் - சாலநரர்
இச்சைக்கள் ளுண்டுமயங் கேழையர்நெஞ் செங்நெ
ஞ்சோ, பிச்சகன்ற வேமாநீ பேசு. (கருச)

வீணசை யுய்ந்துகடைத் தேறவிடா மேதினியில்
வீணசை வெந்துன்பில் வீழ்த்துமே - வீணசை,
நாடுநர ருள்ளத்தி னற்பத்தி நீக்குமே
கேடறுநல் வேமனனே கேள். (கருரு)

பாலிற் பெயும்புளிப்பு வேறாகும் பாலாகா
ஏலு மிதுபோ லிறைஞானம் - சாலத்
தெளிந்தவர்த முள்ளந் திகழ்தருமா லென்றும்
கிளர்ந்தபுகழ் வேமனா கேள். (கருசு)

காயம் வலுத்திருக்கிற் கண்டநல தத்துவத்தா
லாயதோ ருண்மை யறிந்திடலாம் - காயம்
இளைக்குமெனி லுண்மைகண் டெய்தமுடி யாதால்
கிளைத்தபுகழ் வேமனா கேள். (கருஎ)

காவலனோ ரேழை கரந்தொட் டருள்வானேல்
மேவுமவன் வார்த்தைசெலு மேலாகப் - பூவுலகின்
மாவணிக ரொப்பிற் கிளிஞ்சிலுமே மாறாதோ
தாவறுநல் வேமனனே தான். (கருஅ)

தீரத் தருமநெறி சேர்தரும னாதியர்தம்
வீர நனிவிளக்கி மேவினர் - தேரிதுபோல்
மன்னர்க் கறநெறியே மாமுத்தி மூலங்காண்
இன்னலறு வேமாநீ யெண். (கருகூ)

கையெடான் றானங் கனிந்தளியான் மன்பொரு
ளைப், பொய்யல்ல வீட்டிப் புதைத்துவைப்பன் - ஐ
யகோ, தண்டிப்பி லீயுநரன் றன்முற்று மோகெடு
மால், நண்புடைய வேமனா நாடு. (கசு0)

நித்தியமின் மெய்ந்நினைத்து நித்தியமுந் துக்கிப்
பர், நித்தியா னந்தமெனு நீள்பதவி - நித்தியமும்
மன்னற்குள் ஞ்சிறிது மாந்தர் கவலையுறார்
என்னிதுகாண் வேமா வியம்பு. (கசுக)

கூரார் விவேகமெனுங் கோடரியா லஞ்ஞானக்
காராருங் காட்டைக் களைந்தெடுத்துச் - சீர்ஞான
தீபங்கைக்கொண்டாற் றிகழ்முத்திதோன்றுமன்றே
தாபமறு வேமனனே தான். (கசுஉ)

மக்களொடு தாரமெங்கே மற்றுமுள சுற்றமெங்கே
மிக்கநண்பர் தாமும் வினையாளும் - புக்கதெங்கே
போங்கா லெவரும் புடைநெருங்கா ரீதியல்பே
யாங்காணும் வேமா வறி. (கசுந)

அன்னமது நீர்பிரிந்தே யாங்கருந்தும் பாலதுபோன்
மன்னுமயிர் முனருந்த மாட்டாதே - யுன்னுங்கால்
அஞ்ஞானி காணுங்கொ லச்சிவமீ தென்றுநல
மெஞ்ஞானி போல்வேமா வேட்டு. (கசுச)

கண்ணி னிறைமதத்தாற் காணு மெதிர்தோன்றல் .
எண்ணிவர்க்குக் கீழவரோ வீண்டிவர்முன் - நண்
ணியே, நென்னலதன் முன்வருட நாளிறந்தோர்
நீள்செருக்கின், மன்னினரோ விப்படிவே மா. ()

தயங்கொளிசெய் தீபமது தானில்லா வீட்டில்
இயங்குருவங் காணு ரிதுபோல் - வயங்கறிவாங் [ங்
தீபங்கைக்கொண்டிருளிற் செல்லுவரோ மாந்தர்தா
கோபமறு வேமா குறி. (கசுசு)

ஆற்றைக் கடந்தே யருங்கரைகண் டேறினேன்
ஆற்றிலுறு தோணி யவாவுவனோ - சாற்றிதுபோன்
முத்திச் சுகங்கண்டோன் மெய்யுடற்கா வாடுவனோ
கத்தனருள் சார்வேமா காண். (கசுஎ)

மட்குடத்தை நேர்தருமிம் மாய வுடலிறக்கும்
மட்குடத்திற் சீவனென்று மாயாதே - மட்குடமும்
பற்பலவா முள்ளே படர்ககன மொன்றேகாண் .
நற்பதவி சார்வேம னு. (கசா அ)

மாயை சிறையாகு மானசமே வன்றளையாம்
ஆயதோர் பேதமுந்தா னவ்வாறும் - தீயவிப்
பந்தமெனுங் கட்டிற் படுமுயிர்க்கு முத்தியுண்டே
பந்தமறு வேமா பகர். (கசாகூ)

ஞானத்தின் மிக்கசுக நாட்டில்லை மற்றடைந்தோர்
ஞானத்தின் மேன்மை நனிதெரிந்தோர் - ஞானந்தா
லொப்பிலது தத்துவமு முண்மைமுடி வாங்ஙனே [ன்
தப்பகன்ற வேமனனே தான். (கஎ0)

கண்டும் பொருள்காணான் காதிற்கேட் டுங்கேளா
ன், மண்டுசெருக் கெத்தகைத்தோ மாநிலத்திற் -
கண்டெரிந்தும், அந்தகன்கேட் டுஞ்செவிட னென்
மொழிமெய் யானதே, பந்தமறு வேமனனே பார்.

சும்மா விருக்கை சுகோதயநல் யோகங்காண்
மம்மர் மனதசையின் மத்திமமாம் - சும்மாவே
ஆசனபே தங்காட்டு மஃதே யிழிந்ததென்பர்
மாசகன்ற வேமா மதி. (கஎஉ)

மனத்தை யடக்குமவன் மாசுகமங் கெய்தி
மனத்தின்கண் முத்தியினை மன்னும் - தினமரத்தைப்
பாலிப்போ னேரும் பலனருந்த மாட்டானோ
சாலவுநல் வேமனனே தான். (கஎங)

மனமடக்கச் சொல்வன் மனமடங்க மாட்டான்
நனியுணர்த்துந் தானுணரா னூடிக் - கனமார்
சுரிகையினைக் கைப்பிடிப்பன் சூரனென நில்லான்
அரிதன்றோ வேமா வது. (௧௭௪)

கண்ணைத் துலக்கிக் கனகுக்கு மத்திரியி
னெண்ணு மனவிளக்கு நன்கேற்றி - மண்மிசையே
பாவவிரு ணீக்காப் படிற்றுக் குருவிலங்காந்
தேவருள்சார் வேமா தெளி. (௧௭௫)

தேசிகனே தேற்றுவிதை தேகநீர்க் கும்பமுயிர்
வாசனையு சுத்தமே மண்மயமாம் - வாசனைமண்
வித்தா லகற்றில் வியனமுதந் தோன்றுமன்றே
சத்திதுகேள் வேமனனே தான். (௧௭௬)

குருவேநன் மூலங் குலவியசற் சீடர்
உருவார் கிளையா முலகிற் - பரவவல
தேசிகரு ளுத்தமனைத் தேடுகிலா ரென்னரர்தாம்
மாசிகந்த வேமா மதி. (௧௭௭)

பரமன் குருவாம் பகர்சீவ னென்போன்
திரமுறவே கற்குமுயர் சீடன் - தரமறிந்தங்
கவ்விருவ ரொன்றவுற வாக்குமவன் றேசிகனுய்ச்
செவ்வியுறும் வேமா தெளி. (௧௭௮)

உலகுக் கிறையே யுலகர்க் கிறையென்
றிலகதனைத் தேர்ந்துவீ டெய்தார் - இலகிறைவற்
கூடார் நரகக் குழிவீழ்ந்து மாழ்குவரால்
வாடாத வேமா மதி. (௧௭௯)

நிலையா யுயிர்க்குண் ணிலவுபொருள் காணார்
நிலையாத நம்பியது நேடி - யலைவதெவன்
சத்தியம சத்தியமுந் தானுணரின் முத்திகாண்
மத்தமய லற்றெளிர்வே மா. (௧௮௦)

கழிந்ததுக ளைப்பொருளிற் காணுநிகழ் காலத்
தழுந்துதலுங் கூடா தகிலத் - திழிந்தமனே
வாழ்விலுறு நேய மதிக்கின்மிக வற்பங்காண்
தாழ்வகன்ற வேமனனே தான். (௧௮௧)

தானெனலார் தம்மவர்க ளென்பதார் தாமுணர்ந் தும், மானலினுற் றுமுணரார் மாப்பித்தர் - தானி தமும், நூற்குங் குளவியது நூற்குள்ளே மாய்வ தொக்கும், மாற்கெடுத்த வேமனகேண் மற்று. ()

பயமேயஞ் ஞானம் பயமொழியிற் றெய்வ
வியனருளே நந்தமதாய் மேவும் - இயலுடறுன்
மாயுமுயிர் மாய்தரா மற்றுயிர்க்கே வெற்றியுண்டாம்
ஆபவிது வேமா வறி. (௧௮௩)

இறந்தா னிறந்தா னெனக்கலுழ்வர் மாண்டான்
மறந்தார் மதியின மட்டன் - றிறந்திடலும்
தேகத்துக் கன்றித் திகழ்சீவற் குண்டுகொலோ
பாகமுறு வேமாநீ பார். (௧௮௪).

தோற்றலயத் தின்றோர் சுதந்தரமுஞ் சீவற்கே, தோற்றலயந் தோன்றவைத்த தோன்றலுமல்-தோ ற்றமிடை, நாளிலிறை யென்ற னருதற் கிடமன் றோ, கேளெனுநல் வேமாநீ கேள். (௧௮௫)

எங்கே பிரமமுள தென்றுமிகக் கேட்கிற்பர்
இங்கே மதிப்பித்த ரோழைமார் - எங்கேயும்
பூரணமா யப்பிரமம் பூவி னிறைந்துநிற்கும்
காரணநீ வேமனனே காண். (க௮௬)

பலவாம் பசுவினிறம பானிறமோ வொன்றும்
பலவாம்பூ வொன்றுவழி பாடே - நிலையிற்
பலவாந் தரிசனமும் பண்ணவன்மற் றொன்றே
நலவாகேள் வேமனனே நன்கு. (க௮எ)

பணிபலவாம் பொன்னொன்றே பற்பலவா மூண்டி
யணுகுபசி யொன்றே யவைபோன் - மணிஞய
பாண்டம் பலவாம் பகரான்மா வொன்றேகாண்
ஈண்டுணர்க வேமா விது. (க௮௮)

காணுகிலான் றன்னெற்றி காது முதுகினையுங்
காணுகிலான் சென்னிக் கருமயிரும் - காணுகிலான்
தன்னையே தானந்தத் தத்துவத்தைக் காணுவனோ
இன்னலற வேமா விசைந்து. (க௮௯)

திரிந்தங் கலைவன் றிரும்பு நிறைவின்றி
விரும்பு பொருள் கையுறான் வீணே - திரிந்தென்ன
உள்ள மடக்கி லுயர்பிரம மற்றவனே
கள்ளமறு வேமனனே காண். (க௯0)

சித்தமெனும் வேரற்றாற் செப்பும் ப்ரகுர்தியென
வைத்தமரம் வீழும்பின் மாக்கிளையாம்-மெத்த
அவாவு முலர்ந்தங் கழிதருநீ காண்பாய்
தவாவினைகொள் வேமனனே தான். (க௯க)

வைதிடினும் வையான் வலிந்தடித்துந் தானடியான்
கைதலின்றி மற்றிருப்ப ஞானிலத்தில் - எய்தவனே
மாதேவ னேரா மகிமைசொலற் கெளிதோ
கோதேயில் வேமா குறி. (௧௬௨)

நீளசுத்த வாதனைக ணீங்காதே லெவ்வெவர்க்கும்
ஆளிறைவற் காண்ப தரிதரிதே - நீளசுத்தப்
பாசமது நீங்கிற் பதிஞானங் கைகூடும்
நேசமொடு கேள்வேமா நீ. (௧௬௩)

நீர்மே லெழுத்து நிலைநில்லா வாறுபோற் [தனைப்
பார்மேலிவ் வாழ்வெல்லாம் பாழ்ம்பொய்யே-தேரி
பன்முறையுங் கூறிடினும் பற்றுறுவ தென்கொலோ
நன்முறைகொள் வேமா நவில். (௧௬௪)

கள்ள மனத்தவற்குக் கைகூடு மோமுத்தி
எள்ளுந் தொழில்வீ ணியற்றுக - கள்ள
குருவுங் குருவோ குணவீனன் கண்டாய்
அருவறிந்த வேமா வறி. (௧௬௫)

ஆசைவிட்டுக் காம வனலவித்துக் கோவணங்கீழ்
வீசி யிறுக்கி வெகுளிவிட்டுப் - பேசும்
இரகசியங் கண்டோ னிறைதே சிகர்க்காம்
பரமனருள் சார்வேமா பார். (௧௬௬)

ஆசைக் கயிற்றை யறுத்தெறிய மாட்டாரோ
பேசுற்றவீடு பெறலரிதே - ஆசையுறில்
இச்சித்தூண் சிக்கி யெலியழியு மாறழிவர்
பிச்சகன்ற வேமா பெரிது. (௧௬௭)

நல்லவிசை யூறொளியே நாடுச்சுவை கந்தந்தோய்
வல்லபஞ் சேந்திரிய வாதனைக்கோர் - இல்லவுடற்
பற்றறுத்து நிற்காண் பரமசுக வீடடைவாய்
மற்றிதுவே யுண்மைவே மா. (கசஅ)

(இதுவுமது) பஃறொடை வெண்பா.

இன்னிசையு மின்சொல்லு மென்றுஞ்செவிவிரும்பு
மென்பரிசச் சீதமது மெய்விழையுங்-கண்களோ
மன்னு மலங்கார வடிவினையே காதலிக்கும்
நன்னா வறுசுவையே நாடுமா - னாசியதோ
கந்தமது தோயுங் கருதுபஞ் சேந்திரியப்
பந்தமுறு மில்லமெனும் பாழுடலிற் பற்றொரீஇ
நின்னையே கண்டு நிலையெய்தி வேமனா
மன்னுகநீ பேரின்ப வாழ்வு. (கசக)

முதற்பாகம் முற்றிற்று.

இரண்டாம்பாகம்.

கடவுளுருச் சூக்குமத்தைக் கண்டுசுகி யாம
லுடலிளைஞன் பன்னூ லுணர்வன் - திடமுளதோ
சாவுதீர் கல்வி தனையே யுணரான்காண்
மாவன் புறுகுணவே மா. (க)

தகுகரும்பி னீற்றிற் சனிகதிர்தா னின்ப, மிகு
சுவையை மாற்றுதல்போன் மேலாஞ் - சுகுணர்க்
குந், தீயசுதன் றோன்றிற் றிருக்குலத்தின் சீர்கெடு
ப்ப, னேயமொடு கேள்வேமா நீ. (உ)

அங்க மெவருடைமை யாதரிக்கத் தன்பாலே [லா
தங்குபொரு ளாருடைமை தானொளிக்க-அங்குசெ
தான்மா வுடனிறுத்தற் காருடைமை நன்னிலையிற்
றான்மாறு வேமனனே சாற்று. (௩)

சிவபத்தி நீங்குமாற் சீவர்தமைக் கொல்லிற்
சிவனுருவே சீவருரு தேரிற் - பவமிலரோல்
சீவர் சிவமாய்த் திகழ்தருவா ருண்மையே
நாவலனுஞ் சீர்வேமா நாடு. (௪)

மணமகனுக் கன்பு மனையவண்மாட் டின்றே
லணைகடந்து செல்வ ளயலே - எணமின்றி
மாதர் குணந்தான் மகிதலத்தி லிவ்வாறும்
கோதகன்ற வேமா குறி. (௫)

கொங்கணத்துக் கேகிடினுங் குக்க னரியாமோ,
கங்கைபாய் காசிசென்றுங் கான்மாவு - மங்கயம்
போ, லாகுமோ மற்றவரு மவ்வாறே யந்தணரா
யாகுவரோ வேமா வறி. (௬)

ஈகையுளான் றன்னிடத்தி லீயா னமர்ந்துறையி
லீகையது தான்பொரு ளேதெயிறக்கும் - ஈகைமிகு
கற்பகத்தின் கீழ்ப்புதரும் கண்டகமு மாய்வதன்றி
வற்புறுமோ வேமா மதி. (௭)

அற்பகுண னெய்தி லதிகார நல்லவர்பா [ல்
லற்பின்றித் தீங்கியற்று மாங்கவர்க்கே-புற்றொடுதோ
கவ்வியுணுஞ் சூரன் கரும்புருசி காணுமோ
பவ்வமகல் வேமாநீ பார். (அ)

ஆபத்து வேளை யருங்கிளைஞர் பண்புணர்க
நீபயத்திற் கையா ணிலையறிக - தாபஞ்சேர்
இன்மை யுறுபோழ்தி லில்லாள் குணங்காண்க
தன்மையொடு வேமனனே தான். (௯)

காந்தன் மதனெனினுங் காதலகம் வாழ்வெனினும்
ஏய்ந்தயலே சோரவஞ்சி யிச்சிக்கும் - வாய்ந்தநாய்
பாலருத்தித் தான்வளர்த்தும் பல்லுழையு மோடா
தோ, சாலவுநல் வேமனனே தான். (௧0)

கொண்க னறிந்திடினே கொல்லுமிறை தானறியின்
மண்டுமெனு ரூரறியின் மாநிந்தை - யுண்டிருடான்
நாடும் பரபுருடர் நாட்டத்தாற் கற்புடையாள்
நாடுமோ வேமனு நாடு. (௧௧)

அடக்கிமுத லில்லவளை யாளுமஃ தின்றி [ற்
யடக்குதும்பின் னென்றல்வீ ணுமே-தொடக்கத்தி
கிள்ளாச் செடிமரத்திற் கிள்ளப் படுங்கொல்லோ
வெள்ளாப் புகழ்வேமா வெண். (௧௨)

துன்னுங் காடியின் ஞ்ரேலமிகத் தோய்த்திடினும்,
தன்கருமை போய்வெண்மை தானுறுமோ - அன்றி
மரப், பாவை தனையடித்தும் பண்பதனுக் குண்டா
மோ, மேவியசீர் வேமா விளம்பு. (கங)

புணைக்குழையி னுய்வால் புகுத்திடினு முற்றுங்,
குணக்கொழிந்து தானிற்குங் கொல்லோ-வணக்கு
றுநற், புத்திபல கூறிடினும் புல்லர்குண மாறுமோ,
வித்தநிறை வேமா விளம்பு. (கச)

தன்கா தலனுரையைத் தான்றடுத்துக் கூறுவளே
னன்கா தலியன்று நைவிதியே - அன்னதோர்
காதலிபால் வாழ்தலினுங் கானகத்து வாழ்தனன்றே
நீதியிது கேள்வேமா நீ. (கரு)

கணவன்சொற் கேளாதாள் காலனு மச்சப்
பணவரவாஞ் சோகுமாம் பார்க்கிற் - குணநல
மில்லா டனைப்பகைக்கு மில்லா ளலகைக்கே
யில்லா ளெனவேமா வெண். (கசா)

எணமதிநல் யோசனைக ளில்லா மனைவி [ண்
மணவரிசை வீண்போர்செய் மாட்டான்- உணவுவீ
அங்கிற் பணிபுரியர் வாட்டிக் கிடுவதும்வீண்
சங்கையறு வேமனனே தான். (கஎ)

குற்றங் குறிப்போர் குவலயத்தி லெண்ணிலரோ.
குற்றமுள தெல்லவர்க்குங் கூறுங்கான் - மற்றயலார்
குற்றங் குறிப்பர் குறியார்தங் குற்றமே
எற்றிதுகாண் வேமா வியம்பு. (கஅ)

தலஞ்சென்றுங் கள்ளன் றனமுடிகொய் வல்லா
ல், வலஞ்சென்று தெய்வம் வணங்கான் - இலஞ்செ
ன்றும், குக்கன் பணிபுரிதல் கூடுமோ கூடாதே,
நக்கனருள் சார்வேமனு. (௧௯)

ஊர்த்தலைவன் கண்டறிவ னுண்மையிலாப் பொய்
யனையே, சீர்த்தமெய்யற் கண்டறிவான் றேவனே -
ஆர்த்தமனே, அங்கறிவள் பேருண்டி யாளன் றனை
யென்பர், துங்கமுறு வேமா துணிந்து. (௨0)

தலைப்பாகை நல்லாடை தக்கமேற் போர்வை
விலைப்போங் கடுக்கன் மிகவே - மலைக்கும்விரல்
ஆழிகவின் றொந்தியுளார்க் கங்கெவரு மேயுறவாம்
வாழியநல் வேமா மதி. (௨௧)

நீந்தும் வகைதெரியி னீராழங் காண்பதிலென்
சாந்தன்மை தேரிலனூர் தானில்லை - வாய்ந்தகீழ்க்
கோவணத்தின் மேலாக் குறிக்கும் வறுமையிலை
மாவுலகில் வேமா மதி. (௨௨)

வட்டவிழி மங்கையர்தம் மைய றனிலழுந்தி
இட்ட மிகவாகி யேங்குதலென் - கட்டழகு
மேனிதனைக் கண்டு மெலிகுவதென் னுள்ளத்தே
தானிலைகொள் வேமனு சாற்று. (௨௩)

மானுனைக் காணின் மதிக்கும் வலியிழந்தே
தானுர்வ மெய்தித் தழன்மெழுகாம் - ஆனுமை
மிக்கமதி யினத்தே வீண்மோகம் வீழ்த்துங்காண்
தக்கமதி வேமனனே தான். (௨௪)

செல்வ முடையானேற் சித்தசன்கா ணென்பர்மிக
நல்குரவிற் பட்டு நலிந்தோனே - நல்லுருவின்
மார னெனினு மதிப்பர் பறையனென்றே
தீரமிகு வேமா தெளி. (உ௫)

காமனென்றுஞ் சோமனென்றுங் கைத்துண்டாம் போழ்தொருவன், சேமவொளி யெய்திச் சிறந்திருப்பன் - காமத், திருவொழியி லெவ்வளவுந் தீயவனே யாவன், கருவொழிந்த வேமனனே காண். ()

ஈடகலோர் மானி னெழின்மயலே காமுகன்றன்
னீடுவிழி தான்கவரு நீர்மையெற்றே - நாடிவர்தம்
மத்தியிலம் மான்கண் மணிதூதாய் நின்றதுகாண்
உத்தியொடு வேமா வுணர். (உஎ)

ஆசானுக் கீயா ரரித்தவிலைக் கீரையுமே [வ்
வேசிக்கே யீவர்பொருள் வேண்டுமெலாம் - மாசார
வேசியினு மாசான் மிகவிழிந்தோன் போலுமச்சோ
மாசகத்து வேமா மதி. (உஅ)

இனிப்பெவற்றி னுள்ளு மினிப்புயிரோ யாகும், இனிப்புயிரிற் பைம்பொ னினிதாம் - தனிப்பொன்னிற், பூவையர்தஞ் சொல்லினிப்பாம் பூதலத்தி யாவர்க்கும், சேவையுறு வேமா தெளி. (உகூ)

தேமிகுப லாச்சுவையிற் செப்புஞ் சருக்கரையில்
ஆமதுரச் செந்தேனி லான்பாலே-டாமதனில்
இன்கரும்பின் சாற்றி னினிப்பாகு மங்கைமொழி
மன்புவியில் வேமா மதி. (௩0)

திரிகாலி யென்றுந் திரிகாலற் றேடும்
ஒருகாற் சரசகுணத் தோனை - மருவுவளோ
சாணமருந் தும்புழுதான் சர்க்கரையை நாடுமோ
மாறென்றிக்கொள் வேமா மதி. (௩௧)

மனைமரபிற் சுற்ற மகிழுமுயிர்ச் சுற்றம்
அனைமரபிற் சுற்றமொரு வாறே - தனைப்பெற்றோன்
தன்மரபிற் சுற்றமிகு சத்துருக்க ளாகுவர்காண்
நன்மரபு சார்வேமா நாடு. (௩௨)

குருலிங்க சங்கமரைக் குக்கனறி யுங்கொல்
பெரிதவர்தாட் பற்றிப் பிடுங்கும் - தெரியுங்காற்
சந்தையுறு பந்தலில்வாழ் தாசிசந்நி யாசியையு
வந்திடுமோ வேமா மதி. (௩௩)

தாசியொடு நேசமது தானியப்பைப் பொள்ள
லொக்கும், மாசுகையர் தம்மிணக்க மாநிந்தை - தே
சத்திற், காவலா னேசங் கழுத்தறுப்பாய்த் தீருமே,
மாவலனும் வேமா மதி. (௩௪)

அரையனொடுந் தன்கையி லாயுதத்தி னோடும்
எரியினொடு மற்றயலா னில்லோ - டருகெய்தி
யாடும் விளையாட்டி னுருயிர்க்குச் சேதமுண்டாம்
நாடிநீ நல்வேம னே. (௩௫)

இன்சுவைசே ருண்டிநல வேந்திழையை நாடுநரா
ன், தன்சிந்தை யின்றீமை சாற்றுறுமோ - உன்னு
மிவை, மாயமென வெண்ணி மனத்திலிறைப் போ
தும்விடான், நேயமென்றே வேமா னினை. (௩௬)

மனையா ளெழில்கண்டு மை[illegible]மக் கண்டும்
அனையார்மேன் மால்பெருந்[illegible]னைவோடும்
பாவமுறு வன்னெஞ்சைப் பற்[illegible]ன்
மேவுமதோ வேமா விளம்பு.

தேனுஞ் சருக்கரையுந் தேர்கட்டு மாங்கனியுந்
தானுணுமுன் னின்பஞ் சனியாதே - தானசைகொ
ள், மானினிதழ் கண்டளவின் மாமதுரந் தோன்று
மால், மானலறு வேமா மதி. (௩௮)

ஆனிற் பகடதுகீ ழாயினதிங் கெவ்வாறோ
தானல் விலைதாழ்வாந் தன்கறுப்பால் - ஈனன்
துதிக்கப் படான்மேலாத் தோன்று முரவோன்
மதிக்கப்படும் வேமா மற்று. (௩௯)

பதின்மருரை சொல்லே படியெங்குஞ் செல்லும்,
மதிநலமின் றுங்கொருவன் வாய்ச்சொல் - கதை
முடியா, மீதுரையோன் றன்னை வெறுக்கு முலகவர்
காண், வாதனைக ளற்றொளிர்வே மா. (௪௦)

நற்குணமு ளார்க்கு நகத்தளவே செய்திடினும்,
நற்குணத்தி னன்மலையா நாடுவர்காண் - வெற்பள
வாச், செய்திடினு நன்றியது தீக்குணத்த ரொண்ணு
வரோ, உய்திறத்து வேமா வுணர். (௪௧)

பதினு யிரவர்க்காப் பார்த்திபனை நீத்த
விதமாகா தேழைக்கூ ணிட்டாங் - கதைநேர்
சொலலாகா கொண்கனைநற் சுந்தரியும் வைதல்
நலதாகா வேமனனே நாடு. (௪௨)

மக்கண் மனைவியுமே மாமாயை நல்லசுக
துக்கமுமே மா[illegible] தொடர்குடும்பம் - மிக்கவவா
எல்லா[illegible] மாயையே யிம்மாய வாழ்வுக்கா
வ[illegible] மயங்கினேவே மா. (சங)

வாக்குநல மில்லா னிழிபறையன் மன்னருளே
காக்குமதி காரமிலான் கைம்பெண்ணும் - நோக்கில்
மகிமையிலாத் தேவதையு மட்புலியே யாங்காண்
மகிதலத்து வேமா மதி. (சச)

மான முடையமென்பார் மாந்தரெலாம் பித்தன்
போ, லானநினைக் கண்ணுற் றதிசயிப்பர் - மாநிலத்
தில், உன்மானந் தன்னை யுணர்தரூஉந் தெய்வமே,
நன்மான வேமனனே நாடு. (சரு)

கைத்துதவா னீங்கான் கறியமுதுண் ணுடுக்கா
ன், உத்தியிலான் கல்வி யுணர்வுமிலான் - எய்த்தந்
தோ, இவ்வா றிருப்போ னியங்கு நடைப்பிணங்கா
ண், செவ்வாற்றில் வேமனு தேர். (சசா)

நல்குரவி லுள்ள நனியிளைக்கு மீன்றதோர்
புல்லெனவே நல்ல புலன்கெடுமா - னல்குரவால்
உள்ளமதி கெட்டமகற் குண்டாவ தெந்நன்றோ
தெள்ளறிஞு ணும்வேமா தேர். (சஎ)

ஈசற்கிங் கற்பணமா யிவ்வளவே யன்னமிடில்
மாசொர்க்க மெய்தியே வாழ்குவரால் - மாசற்ற
அன்னதா னத்தி லதிகமொரு தானமுண்டோ
நன்னிலத்து வேமனு நாடு. (சஅ)

நத்தன்பி லாவிருந்தா ன[illegible]மாய் பண்டம்வீண்,
பத்தியிலாப் பூசையினற் ப[illegible]ன் - இக்கரை
யில், சற்பாத் திரத்துதவாத[illegible]
ணும், அற்பாரும் வேமா வறி.

தனையுணரா னெங்ஙனமோ தான்பிறர்க்கு ணர்த்
தும், நனிபசுவிற் சோம்பியே நாட்டிற் - பினையலை
ந்தே, காசு பெறுவான் கருமம் புரிந்திடுவான், தே
சிகனே வேமாநீ செப்பு. (௫௦)

மாமைந்தர் தம்மான் மறுமைச் சுகம்பெறுத
லாமென்றே கன்மத் தழுந்துவார் - தாமே
குழிவீழ் கயத்தைக் கொசுகெடுக்குங் கொல்லோ
பழிதீர்ந்த வேமனு பார். (௫௧)

கேடறுநூன் மிக்குணர்ந்துங் கேள்வி பலகேட்டும்
மூடன் மதியின மோக்கமுறு - நாடிக்
கழுவுகினும் பாலிற் கரிநிறம்வே றுமோ
வழுவகன்ற வேமா மதி. (௫௨)

தன்சமய நின்றகலான் றன்புறத்தை நிந்தியான்
வன்சழக்கி னைச மதிக்கணுறுன் - மன்சுகத்தில்
வாழ்வோன் றலைவனாய் மக்களுளே நம்பியெனை
வாழ்வோன்காண் வேமா மதி. (௫௩)

பயனில்லாற் காசி பகரற்க வென்றுங், கயவர்
மொழி கொள்ளற்க காதிற் - பயமுறாஉம், மிக்க
வெறி நாய்பிடித்து வேட்டைக்குச் செல்வதுண்
டோ, தக்கபுகழ் வேமனனே தான். (௫௪)

மனையா [illegible] மக்கண் மாதா பிதாவென், றினை
யார் பொ[illegible]யன்றென்றும் - பொனையிட்டும்,
[illegible]ிற் றனக்குறவிங் காருமிலை, வா
[illegible] மதி. (௫௫)

மாலை கழுககன மணியாடை மீதணிந்து
சாலவே தம்பலமுந் தான்கொண்டு - தூலவுடல்
வாய்ந்துளான் கிழெனினும் வாருமிரு மிங்கென்பா
ஏய்ந்தவனை வேமா விவண். (௫௬)

கழியா மயிருங் கரித்துணியு மற்றங்
கொழியாத மாசா ருடலுங் - கழியுளனேல்
நல்லகுலத் தானெனினு நாடாதே போவென்பர்
தொல்லுலகர் வேமா துணிந்து. (௫௭)

கோள னிறக்கிற் குடியிற் சவங்காண
நீளு முறைமையினு ளேர்செல்வர் - கோளற்கா
வாட்டமுறார் கோநாய் மடியின் மறியழுமோ
நாட்டமுறு வேமனு நாடு. (௫௮)

தெருவிற்போய் வைவள் சிறிதிடிக்கிற் கூவென்,
றிரைவண் முகமறைப்பண் டூண்டே - பெருநீலி,
கூடையினிற் கொண்டேகிக் கொண்கனையும் விற்ப
ளே, நீடுபுகழ் வேமனகே ணீ. (௫௯)

ஆசை கடைத்தரத்த தாகுமெலாப் பாவத்து,
மாசையிலே மாந்தா ரருந்தவரும் - ஆசைதனைக்,
கண்டொழித்து நின்றவரோ காசினியிற் புண்ணியர்
காண், மண்டனுர்தீர் வேமா மதி. (௬0)

உண்மையுரைப் பானை யுலகமெலா நிந்திக்கு
முண்மையினை நீசர்க் குரைத்திடேல் - மண்மி
உண்மைப் பெரியா ருடனுண்மை பேசுதலே
வண்மையிது வேமா மதி.

அஞ்சுகவே பாவங்க ளஞ்சுகவே பாழ்மரணம்
நெஞ்சின் மறந்திடுக நீள்பாசம் - நெஞ்சில்
சிறிதும் மறவற்க செய்ந்நன்றி மண்மே
னெறிநின்ற வேமனு நீ. (சஉ

இச்சகமே யானுமை யிச்சகத்து வேண்டுமால்
குச்சகுணப் புன்மைதரும் கூநிந்தை - யச்சமுறும்
அற்பமதிக் காபத்தா மம்மாச் சரியமே
தற்கெடுக்கும் வேமனனே தான். (ச

வானரத்தை நன்குடுத்தி வல்ல மலைக்கரசா
தாணிறுத்திக் குன்றரிக டாழ்ந்தெழல்போல் -
முறும், நீதியிலார் தம்மிடத்தி னின்றமூங்கு
நல்லூழ், ஏதுமிலார் வேமா விவண். (ச

கந்தமுடற் பூசுகினுங் கத்தபந்தா னஃதுணரா
முந்தி யுதைக்குமம் மூடனையே - பந்தமுறுங்
காம ரசமறியாக் கன்னிபா லன்புமிவ்வா
றுமென்பர் வேமா வறி. (ச

விடல்வேண்டு மூனை விழைசுகமின் றாயின், வி
ல்வேண்டு மிற்குணம்வே றாயின்-விடல்வேண்டு
கோவினையு நல்ல கொடையிலனே லென்பர்கா,
மாவினைதீர் வேமா மதி. (ச)